ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1776/36 - 2012 සැප්තැම්බර් මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.09.20
*1776/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 51/53* (III).

**(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டம்**

*(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மகிந்த சமரசிங்க,*
*பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2012, ஓகத்து 15.*

**ஒழுங்குவிதிகள்**

*1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 917/1 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*2. இறப்பர் கட்டுப்பாட்டாளர், ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலமொன்றின் உரிமையாளரொருவராகவுள்ள எவரேனுமாளினால் அதற்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அத்தகைய தோட்டத்தில் அல்லது சிறு பற்று நிலத்தில் இறப்பர் செடிகளை மீளநடுகை நோக்கத்துக்காக, இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட அவ்வாளுக்கான மானியமொன்றை, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கலாம்.*

*3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்துக்காகப் பொருளளவில் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.*

*4. (1) 2011 ஆம் ஆண்டு தொடர்பில் அல்லது அதற்குப்பின்னர் வழங்கப்பட்டவொரு மீளநடுகை அனுமதிப்பத்திரமொன்றின்மேல், புறநீங்கலாகத் தனிப்பட்ட சொத்தாண்மையைக் கொண்ட ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்றுநிலத்தின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தில் இறப்பரை மீளநடுகை செய்வதற்காகச் செலுத்தற்பாலதான மானியத்தொகையானது, மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் (1,75,000) ரூபாவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் முறையில் எட்டுத் தவணைப்பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-*

*(அ) மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்குமான எட்டாயிரம் (8,000) ரூபா முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய தாவர வகைகளையும் முற்றாகப் பிடுங்கியதன் பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். சொல்லப்பட்ட தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாதவொரு தொகை ஏலவேயுள்ள இறப்பர் மரங்களின் முற்றாக பிடுங்குகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றித் தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளரினால் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல் பகுதியளவான கொடுப்பனவாகச் செலுத்தப்படலாம் ;*

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் நாற்பத்து மூவாயிரம் (43,000 ரூபா) இரண்டாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாத தொகையொன்று மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்டதன்மேல், தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளருக்குப் பகுதி அளவிலான கொடுப்பனவாக இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் செலுத்தப்படலாம். பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். மீளநடுகையைத் தொடர்ந்து பரிசோதனை நடாத்தப்படும் நேரத்தில், அத்தகைய தவணைப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாத் தேவைப்பாடுகளும் நிறைவேற்றப்படுவதில்லை எனக் காணப்படின், திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அவ்விடயங்களுக்காக பின்வரும் முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | | ஒரு ஹெக்டேயருக்கு ரூபா சதம் |
|---|---|---|
| 1. | குழிகளைத் தோண்டுதலும், முளைவிட்ட கட்டைகளை நடுதலும் | 22,000.00 |
| 2. | மண் வளம் பேணல் (வடிகால்களை வெட்டுதல் அல்லது கல்லணைகளை நிர்மாணித்தல் அல்லது மேடைகள் முதலியன). | 10,000.00 |
| 3. | மேவு பயிர் நடுதல் | 3,000.00 |
| 4. | வேலியடைத்தல் | 8,000.00 |

ஏதேனும் மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராத வேலைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்த பின்னரே செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய வேலை பூர்த்தி செய்யப்படும் வரை, மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட வேண்டும்.

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினைந்தாயிரம் ரூபாவான (15,000 ரூபா) மூன்றாவது தவணைப்பணம், மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) நான்காவது தவணைப் பணம், மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்டபின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) ஐந்தாவது தவணைப்பணம், மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) ஆறாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்திரண்டாயிரம் ரூபாவான (22,000) ஏழாவது தவணைப்பணம், மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்துநான்காயிரம் ரூபாவான (24,000 ரூபா) எட்டாவது தவணைப்பணம் :-

(i) மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகள் செல்வதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;
(ii) பால் வெட்டுவதற்குத் தகுந்த பருமனை எய்தியுள்ள ஒவ்வொரு இறப்பர் மரம் மீதும் மழைக் கவசமானது இடப்பட்டிருக்கும்வரை மேற்கூறிய எட்டாவது தவணைப்பணம் செலுத்தப்படலாகாது ; இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது போன்ற அத்தகைய முறையில் மழைக்கவசமானது இடப்பட்டிருக்க வேண்டும் .

(ஏ) (i), (ii) என்பன இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் கீழான (ஆ) பந்தியின் கீழான மீளநடுகையுடன் தொடர்புடையனவன்று.

(2) எவ்வாறாயினும், இறப்பர் கட்டுப்பாட்டாளர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (இ) முதல் (ஏ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முன்னேற்றங்கள் அதன்பின் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் அடையப்பட்டுள்ளனவென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுவதன்மேல், அவர் தனது தற்றுணிபின்பேரில் இயைபான தவணைப்பத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

(3) மீளநடுகை பூர்த்தியாக்கப்பட்ட அல்லது அத்தகைய துப்புரவாக்கலில் பால்வெட்டுதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு எந்தவொரு தவணைப்பணமும் செலுத்தப்படலாகாது. இது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் (ஆ) பந்திக்கு அமைவாக ஏழு ஆண்டுகளாகும். இவ்வொழுங்குவிதியானது 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

(4) களத்தில் கன்றுகளை நாட்டிய திகதி மீளநடுகை திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பு, பரப்பளவில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டேயருக்குக் குறைவாகவுள்ள ஒரு பாகத்தை உள்ளடக்குமிடத்து, செலுத்தப்படற்பாலதான மானியத்தொகையைக் கணிப்பிடுகையில், இடப்பரப்பின் அந்தப்பரப்பளவுக்கு அல்லது பாகத்துக்கு ஏற்புடையற்பாலாகவுள்ளவாறான இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்கள் இடப்பரப்பின் பரப்பளவு அல்லது பாகம் ஒரு ஹெக்டேயருக்கு குறைவாக இருக்கும் ஒரு பாகத்தை ஏதேனும் விடயத்தில் செலுத்த வேண்டிய மானியத்தொகையைக் கணிக்கையில், அந்த இடப்பரப்பின் பாகத்துக்கு ஏற்புடையதாகவுள்ள ஒழுங்குவிதியின் பாகம் ஒரு ஹெக்டேயருக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு சென்றி மீற்றர்கள் (121.92) என்ற உயரத்தில் விட்டத்தில் ஐம்பது தசம் எட்டு சென்றி மீற்றர்களைக் (50.8) கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவையும், மீள நடுகையின் ஐந்தாவது ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்குத் தேவைப்பட்ட மரங்களின் 2/3 எண்ணிக்கையில் ஆகக்குறைந்த எண்ணிக்கையான மரங்களைக் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, ஒரு ஹெக்டேயருக்கு (7,000 ரூபா) தொகையினதாக ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.

(7) (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் காணியின் மீது இறப்பரை மீள நடுவதற்கு எந்த உரிமையாளருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றதோ, அவர், மானியத் தவணைப்பணங்களிலிருந்து வருமதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் ஒன்றில் நடப்புக் கணக்கொன்றையோ அரச வங்கியின் அல்லது தனியார் வர்த்தக வங்கியின் கிளையொன்றில் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

5. (1) மானியத்தின் முதலாவது தவணைப்பணம் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதலும், மீள நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பை நல்ல கமத்தொழிலுக்கு, உரிய நிலைமையில் பேணுதலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) எந்த இடப்பரப்புக்காக மீள நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப்பணங்கள் வருமதியாகவுள்ளதோ அல்லது அதற்கு மேற்பட்ட வருமதியாகவுள்ளனவோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தையோ அல்லது முழுமையையோ விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

6. (1) ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அத்தகைய தவணைப்பணம் கொடுப்பனவு செய்யப்படும் திகதியிலிருந்து ஓராண்டினுள், அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அத்தகைய தவணைப்பணம் அதற்கென கொடுக்கப்படக்கூடியவாறான மேலதிக காலத்தினுள்,

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய வகை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் செடிகளுடன் அத்தகைய இடப்பரப்பை மீள நடுகை செய்வதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படின், இறப்பர் செடிகளும் பருப்புவகை நிலமேவு செடிகளும் தவிர்ந்த ஏனைய எல்லாச் செடிகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது கல்லணைகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தல் வேண்டும் ;

(ஈ) அத்தகைய இடப்பரப்பில் பருப்பு வகை நிலமேவு பயிர்களை நடுதல் வேண்டும், அல்லது எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்கான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ;

(உ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாறு செய்யும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தேவைப்படுத்தப்படின் அத்தகைய இடபரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணித்தல் வேண்டும்.

(2) (அ) இவ்வொழுங்குவிதிகளின் ஆறாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலை, உரிமையாளரினால் செய்யப்படாதவிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன், தேவையான பொருட்களையும் பயன்படுத்தலாம் ;

(ஆ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய உரிமையாளருக்குச் செலுத்தப்படற்பாலானவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமான செலவுகளைக் கழித்தல் வேண்டும்.

7. காணிப் பரப்பொன்று தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பாகமொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அக்காணிப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயரிலும் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணைங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) (i) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட (RRIC, RRISL) உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகளையும் பயன்படுத்தி, மீளநடுகை செய்யப்படும் போதும், இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும்போதும் 516 செடிகள் ; அத்துடன்

(ii) மீளநடுகைக்குப் பின்னரான முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 516 செடிகள்;

(iii) மீளநடுகைக்கு முன்னரான மூன்றாம், நான்காம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 475 செடிகள் ;

(iv) மீளநடுகைக்கு பின்னரான உடனடுத்த இரு ஆண்டுகளில் 450 செடிகள் ;

(v) மீள இவ்வொழுங்குவிதியின் ஒழுங்குவிதி 8 இன் பந்தி (ஆ) உடன் தொடர்புபடும் போது மீளநடுகைக்கு பின்னர் உடனடுத்த 3 ஆண்டுகளுக்கு 450 செடிகள் ;

(ஆ) முளைவிட்ட இறப்பர் தாவரங்கள் பயிரிடும் போது அவை கீழே விதந்துரைக்கப்பட்ட இடைவெளியிலும் எண்ணிக்கையிலுமானதாக செடிகள் நடப்பட வேண்டும்.

(i) RRIC, RRISL மற்றும் ஏனைய உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகள் :

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 350 செ.மீ. X 550 செ.மீ<br>(11' 6"X 18') | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |
| 430 செ.மீ. X 450 செ.மீ<br>(14'X 14' 9") | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |

(ii) (RRIC, RRISL) செடித்தொகுதிகளுடன் மற்றும் ஏனைய உயர் விளைச்சல் செடித்தொகுதிகள்

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 250 செ.மீ. X 775 செ.மீ<br>8'X 25' 6") | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |

(இ)இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் அமைப்பைக் கவனத்துட் கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர வேறுபடற்பாலனவான நடுகை இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரம் அளிக்கலாம். எவ்வாறாயினும், செடிகளுக்கிடையிலான ஆகக்குறைந்த இடைவெளியானது, இவ்வொழுங்குவிதியின் (ஆ) பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் உப்பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள இடைவெளிகளில் கன்றுகளின் எண்ணிக்கைக்கு குறைதல் கூடாது.

8. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அத்தகைய இடப்பரப்பில் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றின் ஆகக்குறைந்த சுற்றளவு நிலத்துக்குமேல் 121.92 சென்றி மீற்றர் உயரத்தில் இருக்கக்கூடிய,

(அ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்கள் அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ளவிடத்து 1 ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் அத்துடன்

| நிரல் I | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 15.87 |
| மீள நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 25.40 |
| மீள நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 31.75 |
| மீள நடுகையின் பின்னர் ஆறாமாண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்களுக்குக் குறைவான சராசரி வருடாந்த மழைவீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் உள்ளவிடத்து, II ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் அத்துடன்

| நிரல் II | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 13.97 |
| மீள நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 22.86 |
| மீள நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 27.94 |
| மீள நடுகையின் பின்னர் ஏழாமாண்டின் முடிவில் | 50.80 |

இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

9. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் முழுமையான மானியத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை பெறுபவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமானவையேனும் நிலத்திலிருந்து அளக்கின்றபோது நூற்றிருபத்தொன்று தசம் புள்ளி ஒன்பது இரண்டு (121.92) சென்றி மீற்றர்களைக் கொண்ட உயரத்தில் ஐம்பது தசம் புள்ளி எட்டு சைபர் (50.80) சென்றி மீற்றர்களைக் கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவரை, ஏதேனும் இறப்பர் செடியிலிருந்து பால்வெட்டுதலோ அல்லது பால் வெட்டுவித்தலோ ஆகாது.

10. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு இவ்வொழுங்குவிதியின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழான மானியமொன்று செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் அறிவித்தல் மூலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியுனுள், இறப்பர் தோட்டத்தை அல்லது சிறு பற்றுநிலத்தை மீளநடுகை செய்வதனைத் திருப்பதிகரமானவொரு முறையில் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதுகின்றவராக அவரினால் எழுத்தில் வழங்கப்படும் அத்தகைய பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

11. (அ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், 5, 6, 7, 8 அல்லது 9 ஆகிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென, அல்லது ;

(ஆ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின்பாலான அசட்டை அல்லது விழிப்புக்கவனத்துடனான முயற்சி இல்லாமை காரணமாக, ஓர் இடப்பரப்பில் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகள், இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தனவாக இருக்கவில்லையென அல்லது

(இ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதியின் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு மானியம் அல்லது தடைக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளனரென,

இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல்மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மானியத்தொகையை மீளளிக்கும்படி அவரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

12. இவ்வொழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் இவ்வொழுங்குவிதியின் கீழான கையளிப்புத் தத்துவம் தவிர்ந்து, தனது கைப்பட எழுதியதின்பேரில் இறப்பர் கட்டுப்பாட்டாளர் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் எவரேனும் உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.

13. (அ) 5, 6, 7, 8, 9, 10 அல்லது 11 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் விண்ணப்பமொன்று வெளிப்படுத்துகையொன்று அல்லது ஏதேனும் கூற்று பொய்யானதென அறிந்து கொண்டு அதனைச் செய்கின்ற அல்லது ;

(இ) ஒரு மானியத்துக்கான விண்ணப்பதாரரொருவராக அல்லது பெறுநரொருவராக இருந்து கொண்டு இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்ற ;

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

14. (1) இவ்வொழுங்குவிதியின்கீழ் செலுத்தப்பட்ட மானியத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தவறுகின்றவிடத்தெல்லாம் அத்தகைய தொகைகள், ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆளொருவர் அத்தகைய மானியத்தை திருப்பிச் செலுத்தத்தவறின் அத்துடன் சிறுபற்று நிலமொன்று அல்லது தோட்டமொன்றை கைவிட்டுச் சென்றுள்ளார் என்று இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நிகழ்வின் முகற்றோற்றளவிலான சான்றாகக் கருதப்பட வேண்டும்.

15. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1953, ஒற்றோபர் 3 ஆந் திகதிய 10594 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1953 ஆம் ஆண்டின் இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2005, 2006, 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் மீளநடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப்பணங்கள், பின்வரும் முறையில் 4 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் செலுத்தப்பட்டிராவிடின், மட்டுமே அத்தகைய தவணைப் பணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையின்கீழுள்ள தோட்டங்களும் சிறுபற்று நிலங்களும் –

| | | |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஏ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான எட்டாவது தவணைப்பணம் ; |
| 2006 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (எ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2007 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஊ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2008 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (உ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2009 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஈ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான நான்காவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2010 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (இ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2011 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (அ) மற்றும் (ஆ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான முதலாவது தவணைப்பணத்திலிருந்து. |

16. இவ்வொழுங்குவிதிகளில் –

"தோட்டம்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயருக்குக் குறைவாகவிராததும் இறப்பர் கன்றுகளிலிருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு என்று பொருள்படும்.

"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்.

"மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்.

"சிறுபற்று நிலங்கள்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயர்களுக்குக் குறைவுள்ளதும் இறப்பர் கன்றுகளில் இருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு ஒன்று என்று பொருளாகும்.

"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும் என்பதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

10- 299/1

---

ச.வ.பீ. 51/53 (III).

**(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டம்**

(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மகிந்த சமரசிங்க,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2012, ஓகத்து 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 917/2 ஆம் இலக்க, இறப்பர் புதுநடுகை மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இறப்பர் கட்டுப்பாட்டாளர், ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளரொருவராகவுள்ள எவரேனுமாளினால் அதற்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணபத்தின் மேல், அத்தகைய தோட்டத்தில் அல்லது சிறு பற்று நிலத்தில் இறப்பர் செடிகளை புது நடுகை செய்யும் நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீளநடுகை மானிய நிதியத்திலிருந்து அவ்வாளுக்கான மானியமொன்றை இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கலாம்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்துக்காகப் பொருளளவில் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

4. (1) 2011 ஆம் ஆண்டு தொடர்பில் அல்லது அதற்குப்பின்னர் வழங்கப்பட்டவொரு புதுநடுகை அனுமதிப்பத்திரமொன்றின்மேல், புறநீங்கலாகத் தனிப்பட்ட சொத்தாண்மையைக் கொண்ட ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்றுநிலத்தின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தில் இறப்பரை புதுநடுகை செய்வதற்காகச் செலுத்தப்படற்பாலதான மானியத்தின் தொகையானது, புதுநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாக (1,50,000) ரூபாவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் முறையில் எட்டுத் தவணைப்பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-

(அ) புதுநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்குமான ஆறாயிரம் (6,000) ரூபா முதலாவது தவணைப்பணம் அனுமதிக்கப்பட்ட இடப்பரப்பில் ஏலவேயுள்ள தாவர வகைகளை முற்றாகப் பிடுங்கியெடுத்த பின்னரும் இறப்பர் செடிகளை நடுவதற்காக குழிகளைத் தோண்டிய பின்னரும் செலுத்தப்படுதல் வேண்டும். குழிகளைத் தோண்டுவது பூர்த்தி செய்யப்படுவதற்கு முன் தவணைப்பணமானது செலுத்தப்படலாகாது ;

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் முப்பதாறாயிரம் ரூபா (36,000 ரூபா) இரண்டாவது தவணைப்பணம் புது நடுகை பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாத தொகையொன்று புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்டதன்மேல், தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளருக்குப் பகுதி அளவிலான கொடுப்பனவாக இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் செலுத்தப்படலாம். புதுநடுகையைத் தொடர்ந்து பரிசோதனை நடாத்தப்படும் நேரத்தில், அத்தகைய தவணைப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாத் தேவைப்பாடுகளும் நிறைவேற்றப்படுவதில்லை எனக் காணப்படின், திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அவ்விடயங்களுக்காக பின்வரும் முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | | ஒரு ஹெக்டேயருக்கு ரூபா சதம் |
|---|---|---|
| (1) | குழிகளைத் தோண்டுதலும், முளைவிட்ட கட்டைகளை நடுதலும் | 18,000.00 |
| (2) | மண் வளம் பேணல் (வடிகால்களை வெட்டுதல் அல்லது கல்லணைகளை நிர்மாணித்தல் அல்லது மேடைகள் முதலியன). | 8,000.00 |
| (3) | மேவு பயிர் நடுதல் | 2,000.00 |
| (4) | வேலியடைத்தல் | 8,000.00 |

ஏதேனும் மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராத வேலைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்த பின்னரே செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய வேலை பூர்த்தி செய்யப்படும் வரை, மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட வேண்டும்.

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பன்னிரண்டாயிரம் ரூபாவான (12,000 ரூபா) மூன்றாவது தவணைப்பணம், புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினெட்டாயிரம் ரூபாவான (18,000 ரூபா) நான்காவது தவணைப் பணம், புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்டபின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினெட்டாயிரம் ரூபாவான (18,000 ரூபா) ஐந்தாவது தவணைப்பணம், புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினெட்டாயிரம் ரூபாவான (18,000 ரூபா) ஆறாவது தவணைப்பணம், புது நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பத்தொன்பதாயிரம் ரூபாவான (19,000 ரூபா) ஏழாவது தவணைப்பணம், புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்து மூவாயிரம் ரூபாவான (23,000 ரூபா) எட்டாவது தவணைப்பணம் .

(i) புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகள் செல்வதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;
(ii) பால் வெட்டுவதற்குத் தகுந்த பருமனை எய்தியுள்ள ஒவ்வொரு இறப்பர் மரம் மீதும் மழைக் கவசமானது இடப்பட்டிருக்கும்வரை மேற்கூறிய எட்டாவது தவணைப்பணம் செலுத்தப்படலாகாது ; இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது போன்ற அத்தகைய முறையில் மழைக்கவசமானது இடப்பட்டிருக்க வேண்டும் .

(ஏ) (i), (ii) என்பன இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் கீழான (ஆ) பந்தியின் கீழான மீளநடுகையுடன் தொடர்புடையனவன்று.

(2) எவ்வாறாயினும், இறப்பர் கட்டுப்பாட்டாளர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (இ) முதல் (ஏ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட முன்னேற்றங்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் அடையப்பட்டுள்ளனவென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுவதன்மேல், அவர் தனது தற்றுணிபின்பேரில் இயைபான தவணைப்பணத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

(3) நடுகை பூர்த்தியாக்கப்பட்ட அல்லது அத்தகைய துப்புரவாக்கலில் பால்வெட்டுதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு எந்தவொரு தவணைப்பணமும் செலுத்தப்படலாகாது. இது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் (ஆ) பந்திக்கு அமைவாக ஏழு ஆண்டுகளாகும். இவ்வொழுங்குவிதியானது 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

(4) களத்தில் கன்றுகளை நாட்டிய திகதி புதுநடுகை திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) புதுநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பு, பரப்பளவில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டேயருக்குக் குறைவாகவுள்ள ஒரு பாகத்தை உள்ளடக்குமிடத்து, செலுத்தப்படற்பாலதான மானியத்தொகையைக் கணிப்பிடுகையில், இடப்பரப்பின் அந்தப்பரப்பளவுக்கு அல்லது பாகத்துக்கு ஏற்புடையற்பாலதாகவுள்ளவாறான இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்கள் இடப்பரப்பின் பரப்பளவு அல்லது பாகம் ஒரு ஹெக்டேயருக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு சென்றி மீற்றர்கள் (121.92) என்ற உயரத்தில் விட்டத்தில் ஐம்பது தசம் எட்டு சைவர் சென்றி மீற்றர்களைக் (50.80) கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவையும், புதுநடுகையின் ஐந்தாவது ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்குத் தேவைப்பட்ட மரங்களின் 2/3 எண்ணிக்கையில் ஆகக்குறைந்த எண்ணிக்கையான மரங்களைக் கொண்ட புதுநடுகைப் பெருந்தோட்டங்களுக்கு அல்லது சிறுபற்று நிலத்தில் அப்பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருரிடமிருந்து சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, ஒரு ஹெக்டேயருக்கு (7,000 ரூபா) தொகையினதாக ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.

(7) (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் காணியின் மீது இறப்பரை புதிதாக நடுவதற்கு எந்த உரிமையாளருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றதோ, அவர், மானியத் தவணைப்பணங்களை செலுத்துவதற்கும் மானியத் தவணைப்பணங்களிலிருந்து வருமதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் ஒன்றில் நடப்புக் கணக்கொன்றையோ அரச வங்கியின் அல்லது தனியார் வர்த்தக வங்கியின் கிளையொன்றில் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

5. (1) மானியத்தின் முதலாவது தவணைப்பணம் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதலும், புது நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பை நல்ல கமத்தொழிலுக்கு, உரிய நிலைமையில் பேணுதலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) எந்த இடப்பரப்புக்காக புது நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப்பணங்கள் வருமதியாகவுள்ளதோ அல்லது அதற்கு மேற்பட்ட வருமதியாகவுள்ளனவோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தையோ அல்லது முழுமையையோ விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

6. (1) இறப்பரை புதுநடுகை செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் ஆளொவருவர், ஓராண்டினுள், அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளினால் அதற்கெனக் கொடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலத்தினுள் ஏலவேயுள்ள தாவர வகைகளை முற்றாகப் பிடுங்கி பின்னரும் அதனை நடுகை செய்வதற்காக அவ்விடப்பரப்பை துப்புரவாக்கிய பின்னரும் –

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய வகை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் செடிகளுடன் அத்தகைய இடப்பரப்பை நடுகை செய்வதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படின், இறப்பர் செடிகளும் பருப்புவகை நிலமேவு செடிகளும் தவிர்ந்த ஏனைய எல்லாச் செடிகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது கல்லணைகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தல் வேண்டும் ;

(ஈ) அத்தகைய இடப்பரப்பில் பருப்பு வகை நிலமேவு பயிர்களை நடுதல் வேண்டும், அல்லது எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்கான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ;

(உ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாறு செய்யும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தேவைப்படுத்தப்படின் அத்தகைய இடபரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணித்தல் வேண்டும் :-

(2) (அ) இவ்வொழுங்குவிதிகளின் ஆறாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலை, உரிமையாளரினால் செய்யப்படாதவிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன், தேவையான பொருட்களையும் பயன்படுத்தலாம் ;

(ஆ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய உரிமையாளருக்குச் செலுத்தப்படற்பாலனவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமான செலவுகளைக் மீட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

7. காணிப்பரப்பொன்று தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பாகமொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அக்காணிப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயரிலும் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணைங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) (i) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ( RRIC, RRISL) உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகளையும் பயன்படுத்தி, புதுநடுகை செய்யப்படும் போதும், இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும்போதும் 516 செடிகள் ; அத்துடன்

(ii) நடுகைக்குப் பின்னரான முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 516 செடிகள்;

(iii) நடுகைக்கு பின்னரான மூன்றாம், நான்காம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 475 செடிகள் ;

(iv) நடுகைக்கு பின்னரான உடனடுத்த இரு ஆண்டுகளில் 450 செடிகள் ;

(v) இவ்வொழுங்குவிதியின் ஒழுங்குவிதி 8 இன் பந்தி (ஆ) உடன் தொடர்புபடும் போது நடுகைக்கு பின்னர் உடனடுத்த 3 ஆண்டுகளுக்கு 450 செடிகள் ;

(ஆ) முளைவிட்ட இறப்பர் தாவரங்கள் பயிரிடும் போது அவை கீழே விதந்துரைக்கப்பட்ட இடைவெளியிலும் எண்ணிக்கையிலுமானதாக செடிகள் நடப்பட வேண்டும்.

(i) ( RRIC, RRISL) மற்றும் ஏனைய உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகள் :

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 350 செ. மீ. x 550 செ. மீ<br>(11' 6"x 18') | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |
| 430 செ. மீ. x 450 செ. மீ<br>(14'x 14' 9") | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |

(ii) ( RRIC, RRISL) செடித்தொகுதிகளுடன் மற்றும் ஏனைய உயர் விளைச்சல் செடித்தொகுதிகள்

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 250 செ. மீ. x 775 செ. மீ<br>(8'x 26') | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் அமைப்பைக் கவனத்துட் கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர வேறுபடற்பாலனவான நடுகை இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரம் அளிக்கலாம். எவ்வாறாயினும், செடிகளுக்கிடையிலான ஆகக்குறைந்த இடைவெளியானது, இவ்வொழுங்குவிதியின் (ஆ) பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் உட்பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள இடைவெளிகளில் கன்றுகளின் எண்ணிக்கைக்கு குறைதல் கூடாது.

8. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அத்தகைய இடப்பரப்பில் நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றின் ஆகக்குறைந்த சுற்றளவு நிலத்துக்குமேல் 121.92 சென்றி மீற்றர் உயரத்தில் இருக்கக்கூடிய,

(அ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்கள் அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ளவிடத்து 1 ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் ; அத்துடன்

| நிரல் I | நிரல் II |
|---|---|
| புது நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| புது நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 15.87 |
| புது நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 25.40 |
| புது நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 31.75 |
| புது நடுகையின் பின்னர் ஆறாமாண்டின் முடிவில் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்களான அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழைவீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் உள்ளவிடத்து, II ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் ; அத்துடன்

| நிரல் II | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| புது நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| புது நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 13.97 |
| புது நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 22.86 |
| புது நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 27.94 |
| புது நடுகையின் பின்னர் ஏழாமாண்டின் முடிவில் | 50.80 |

இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

9. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் முழுமையான மானியத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை பெறுபவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமானவையேனும் நிலத்திலிருந்து அளக்கின்றபோது நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்றி மீற்றர்களைக் கொண்ட உயரத்தில் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்றி மீற்றர்களைக் கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவரை, ஏதேனும் இறப்பர் செடியிலிருந்து பால்வெட்டுதலோ அல்லது பால் வெட்டுவித்தலோ ஆகாது.

10. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு இவ்வொழுங்குவிதியின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழான மானியமொன்று செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் அறிவித்தல் மூலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியுனுள், இறப்பர் தோட்டத்தை அல்லது சிறு பற்றுநிலத்தை புதுநடுகை செய்வதனைத் திருப்பதிகரமானவொரு முறையில் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதுகின்றவராக அவரினால் எழுத்தில் வழங்கப்படும் அத்தகைய பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

11. (அ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், 5, 6, 7, 8 அல்லது 9 ஆகிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென, அல்லது ;

(ஆ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின்பாலான அசட்டை அல்லது விழிப்புக்கவனத்துடனான முயற்சி இல்லாமை காரணமாக, ஓர் இடப்பரப்பில் புதுநடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகள், இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தனவாக இருக்கவில்லையென அல்லது

(இ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதியின் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு மானியம் அல்லது தடைக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளனரென,

இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல்மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மானியத்தொகையை மீளளிக்கும்படி அவரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

12. இவ்வொழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் இவ்வொழுங்குவிதியின் கீழான கையளிப்புத் தத்துவம் தவிர்ந்து, தனது கைப்பட எழுதியதின்பேரில் இறப்பர் கட்டுப்பாட்டாளர் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் எவரேனும் உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.

13. (அ) 5, 6, 7, 8, 9, 10 அல்லது 11 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் விண்ணப்பமொன்று வெளிப்படுத்துகையொன்று அல்லது ஏதேனும் கூற்று பொய்யானதென அறிந்து கொண்டு அதனைச் செய்கின்ற அல்லது ;

(இ) ஒரு மானியத்துக்கான விண்ணப்பதாரரொருவராக அல்லது பெறுநரொருவராக இருந்து கொண்டு இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்ற.

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

14. (1) இவ்வொழுங்குவிதியின்கீழ் செலுத்தப்பட்ட மானியத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தவறுகின்றவிடத்தெல்லாம் அத்தகைய தொகைகள், ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆளொருவர் அத்தகைய மானியத்தை திருப்பிச் செலுத்தத்தவறின் அத்துடன் சிறுபற்று நிலமொன்று அல்லது தோட்டமொன்றை கைவிட்டுச் சென்றுள்ளார் என்று இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நிகழ்வின் முகற்றோற்றளவிலான சான்றாகக் கருதப்பட வேண்டும்.

15. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1977 மாச் சு 23 ஆந் திகதிய 258ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1977 ஆம் ஆண்டின் இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2005, 2006, 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் புதுநடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப்பணங்கள், பின்வரும் முறையில் 4 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் செலுத்தப்பட்டிராவிடின், மட்டுமே அத்தகைய தவணைப் பணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும் :-

புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையின்கீழுள்ள தோட்டங்களும் சிறுபற்று நிலங்களும் :-

| | | |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஏ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான எட்டாவது தவணைப்பணம் ; |
| 2006 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (எ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2007 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஊ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2008 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (உ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2009 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஈ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான நான்காவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2010 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (இ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான நான்காவது தவணைப்பணத்திலிருந்து ; |

2011 ஆம் ஆண்டு - இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (அ) மற்றும் (ஆ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான முதலாவது தவணைப்பணத்திலிருந்து.

16. இவ்வொழுங்குவிதிகளில் -

"தோட்டம்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயருக்குக் குறைவாகவிராததும் இறப்பர் கன்றுகளிலிருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு என்று பொருள்படும்.

"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்.

"புதுநடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்.

"சிறுபற்று நிலங்கள்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயர்களுக்குக் குறைவுள்ளதும் இறப்பர் கன்றுகளில் இருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு ஒன்று என்று பொருளாகும்.

"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும் என்பதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

10- 299/2

---

ச.வ.பீ. 51/53 (III).

**(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டம்**

(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மகிந்த சமரசிங்க,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2012, ஓகத்து 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 917/3 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இறப்பர் கட்டுப்பாட்டாளர், ஒரு தோட்டத்தின் உரிமையாளரொருவராகவுள்ள எவரேனுமாளினால் அதற்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அத்தகைய தோட்டத்தில் இறப்பர் செடிகளை மீளநடுகை நோக்கத்துக்காக), (இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீளநடுகை மானிய நிதியத்திலிருந்து அவ்வாளுக்கான மானியமொன்றை இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கலாம்.

3. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்துக்காகப் பொருளளவில் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

4. (1) 2011 ஆம் ஆண்டு தொடர்பில் அல்லது அதற்குப்பின்னர் வழங்கப்பட்டவொரு மீளநடுகை அனுமதிப்பத்திரமொன்றின்மேல், புறநீங்கலாகத் தனிப்பட்ட சொத்தாண்மையைக் கொண்ட ஒரு தோட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தில் இறப்பரை புதுநடுகை செய்வதற்காகச் செலுத்தற்பாலதான மானியத்தொகையானது, நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஒரு

இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாக (1,75,000) ரூபாவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் முறையில் எட்டுத் தவணைப்பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-

(அ) மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கான எட்டாயிரம் (8,000) ரூபா முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய தாவர வகைகளை முற்றாகப் பிடுங்கியதன் பின்னர் செலுத்த வருதல் சொல்லப்பட்ட தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாதவொரு தொகை ; ஏலவேயுள்ள இறப்பர் மரங்களின் முற்றான பிடுங்குகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றித் தோட்டத்தின் உரிமையாளரினால் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதன் மேல் பகுதியளவான கொடுப்பனவாகச் செலுத்தப்படலாம் ;

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் நாற்பத்து முவாயிரம் ரூபா (43,000 ரூபா) இரண்டாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாத தொகையொன்று மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்டதன்மேல், தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளருக்குப் பகுதி அளவிலான கொடுப்பனவாக இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் செலுத்தப்படலாம். மீள நடுகையைத் தொடர்ந்து பரிசோதனை நடாத்தப்படும் நேரத்தில், அத்தகைய தவணைப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாத் தேவைப்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை எனக் காணப்படின், திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அவ்விடயங்களுக்காக பின்வரும் முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | | ஒரு ஹெக்டேயருக்கு ரூபா சதம் |
|---|---|---|
| 1. | குழிகளைத் தோண்டுதலும், முளைவிட்ட கட்டைகளை நடுதலும் | 22,000.00 |
| 2. | மண் வளம் பேணல் (வடிகால்களை வெட்டுதல் அல்லது கல்லணைகளை நிர்மாணித்தல் அல்லது மேடைகள் முதலியன). | 10,000.00 |
| 3. | மேவு பயிர் நடுதல் | 3,000.00 |
| 4. | வேலியடைத்தல் | 8,000.00 |

ஏதேனும் மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராத வேலைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்த பின்னரே செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய வேலை பூர்த்தி செய்யப்படும் வரை, மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட வேண்டும்.

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினைந்தாயிரம் ரூபாவான (15,000 ரூபா) மூன்றாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) நான்காவது தவணைப் பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்டபின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(உ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) ஐந்தாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்தோராயிரம் ரூபாவான (21,000 ரூபா) ஆறாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்திரண்டாயிரம் ரூபாவான (22,000) ஏழாவது தவணைப்பணம், மீள நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் இருபத்து நான்காயிரம் ரூபாவான (24,000 ரூபா) எட்டாவது தவணைப்பணம் .

(i) மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகள் செல்வதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) பால் வெட்டுவதற்குத் தகுந்த பருமனை எய்தியுள்ள ஒவ்வொரு இறப்பர் மரம் மீதும் மழைக் கவசமானது இடப்பட்டிருக்கும்வரை மேற்கூறிய எட்டாவது தவணைப்பணம் செலுத்தப்படலாகாது ; இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது போன்ற அத்தகைய முறையில் மழைக்கவசமானது இடப்பட்டிருக்க வேண்டும் .

(ஏ) (i), (ii) என்பன இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் கீழான (ஆ) பந்தியின் கீழான மீளநடுகையுடன் தொடர்புடையனவன்று.

(2) எவ்வாறாயினும், இறப்பர் கட்டுப்பாட்டாளர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (இ) முதல் (ஏ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முன்னேற்றங்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் அடையப்பட்டுள்ளனவென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுவதன்மேல், அவர் தனது தற்றுணிபின்பேரில் இயைபான தவணைப்பத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

(3) மீளநடுகை பூர்த்தியாக்கப்பட்ட அல்லது அத்தகைய துப்புரவாக்கலில் பால்வெட்டுதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு எந்தவொரு தவணைப்பணமும் செலுத்தப்படலாகாது. இது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் (ஆ) பந்திக்கு அமைவாக ஏழு ஆண்டுகளாகும். இவ்வொழுங்குவிதியானது 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

(4) களத்தில் கன்றுகளை நாட்டிய திகதி மீளநடுகை திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பு, ஒரு ஹெக்டேயருக்குக் குறைவாகவுள்ள ஒரு பாகத்தை உள்ளடக்குமிடத்து, செலுத்தப்படற்பாலதான மானியத்தொகையைக் கணிப்பிடுகையில், இடப்பரப்பின் அந்தப்பரப்பளவுக்கு அல்லது பாகத்துக்கு ஏற்புடையற்பாலதாகவுள்ளவாறான இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்கள் இடப்பரப்பின் பரப்பளவு அல்லது பாகம் ஒரு ஹெக்டேயருக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் புள்ளி ஒன்பது இரண்டு சென்றி மீற்றர்கள் (121.92) என்ற உயரத்தில் விட்டத்தில் ஐம்பது தசம் புள்ளி எட்டு சைவர் சென்றி மீற்றர்களைக் (50.8) கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவையும், மீள நடுகையின் ஐந்தாவது ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்குத் தேவைப்பட்ட மரங்களின் 2/3 எண்ணிக்கையில் ஆகக்குறைந்த எண்ணிக்கையான மரங்களைக் கொண்ட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருரிடமிருந்து சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, ஒரு ஹெக்டேயருக்கு (7,000 ரூபா) தொகையினதாக ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.

(7) (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் காணியின் மீது இறப்பரை புதிதாக மீளநடுவதற்கு எந்த உரிமையாளருக்கு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றதோ, அவர், மானியத் தவணைப்பணங்களிலிருந்து வருமதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் ஒன்றில் நடப்புக் கணக்கொன்றையோ அரச வங்கியின் அல்லது தனியார் வர்த்தக வங்கியின் கிளையொன்றில் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

5. (1) மானியத்தின் முதலாவது தவணைப்பணம் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதலும், மீள நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பை நல்ல கமத்தொழிலுக்கு, உரிய நிலைமையில் பேணுதலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) எந்த இடப்பரப்புக்காக மீள நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப்பணங்கள் வருமதியாகவுள்ளதோ அல்லது வருமதியாகவுள்ளனவோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தையோ அல்லது முழுமையையோ விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

6. (1) ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அத்தகைய தவணைப்பணம் கொடுப்பனவு செய்யப்படும் திகதியிலிருந்து ஓராண்டினுள், அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளினால் அத்தகைய தவணைப்பணம் அதற்கென கொடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலத்தினுள் –

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய வகை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் செடிகளுடன் அத்தகைய இடப்பரப்பை மீள நடுகை செய்வதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படின், இறப்பர் செடிகளும் பருப்புவகை நிலமேவு செடிகளும் தவிர்ந்த ஏனைய எல்லாச் செடிகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது கல்லணைகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தல் வேண்டும் ;

(ஈ) அத்தகைய இடப்பரப்பில் பருப்பு வகை நிலமேவு பயிர்களை நடுதல் வேண்டும், அல்லது எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்கான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ;

(உ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாறு செய்யும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தேவைப்படுத்தப்படின் அத்தகைய இடபரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணித்தல் வேண்டும்.

(2) (அ) இவ்வொழுங்குவிதிகளின் ஆறாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலை, உரிமையாளரினால் செய்யப்படாதவிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர் அத்தகைய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன், தேவையான பொருட்களையும் பயன்படுத்தலாம் ;

(ஆ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய உரிமையாளருக்குச் செலுத்தப்படற்பாலனவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமான செலவுகளைக் கழித்தல் வேண்டும்.

7. காணிப்பரப்பொன்று தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பாகமொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அக்காணிப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயரிலும் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) (i) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ( RRIC, RRISL) உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகளையும் பயன்படுத்தி, மீளநடுகை செய்யப்படும் போதும், 516 செடிகள் ; அத்துடன்

(ii) மீள நடுகைக்குப் பின்னரான முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 516 செடிகள்;

(iii) மீள நடுகைக்கு முன்னரான மூன்றாம், நான்காம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 475 செடிகள் ;

(iv) மீள நடுகைக்கு பின்னரான உடனடுத்த இரு ஆண்டுகளில் 450 செடிகள் ;

(v) மீள இவ்வொழுங்குவிதியின் ஒழுங்குவிதி 8 இன் பந்தி (ஆ) உடன் தொடர்புபடும் போது மீளநடுகைக்கு பின்னர் உடனடுத்த 3 ஆண்டுகளுக்கு 450 செடிகள் ;

(ஆ) முளைவிட்ட இறப்பர் தாவரங்கள் பயிரிடும் போது அவை கீழே விதந்துரைக்கப்பட்ட இடைவெளியிலும் எண்ணிக்கையிலுமானதாக செடிகள் நடப்பட வேண்டும்:-

(i) ( RRIC, RRISL) மற்றும் ஏனைய உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகள் :

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 350 செ.மீ. x 550 செ.மீ<br>(11' 6"x 18') | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |
| 430 செ.மீ. x 450 செ.மீ<br>(14'x 14' 19") | ஒரு ஹெக்டெயருக்கு 516<br>(ஒரு ஏக்கருக்கு 209) |

(ii) ( RRIC, RRISL) செடித்தொகுதிகளுடன் மற்றும் ஏனைய உயர் விளைச்சல் செடித்தொகுதிகள்

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 250 செ. மீ. x 775 செ. மீ (8'x 26') | ஒரு ஹெக்டெயருக்கு 516 (ஒரு ஏக்கருக்கு 209) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் அமைப்பைக் கவனத்திட் கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர வேறுபடற்பாலனவான நடுகை இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரம் அளிக்கலாம். எவ்வாறாயினும், செடிகளுக்கிடையிலான ஆகக்குறைந்த இடைவெளியானது, இவ்வொழுங்குவிதியின் (ஆ) பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் உட்பந்திகளில் விதிக்கப்பட்டதற்கு குறைவாகவிருத்தலாகாது.

8. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அத்தகைய இடப்பரப்பில் மீள் நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றின் ஆகக்குறைந்த சுற்றளவு நிலத்துக்குமேல் 121.92 சென்றி மீற்றர் உயரத்தில் இருக்கக்கூடிய,

(அ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்கள் அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ளவிடத்து I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் அத்துடன்

| நிரல் I | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 15.87 |
| மீள நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 25.40 |
| மீள நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 31.75 |
| மீள நடுகையின் பின்னர் ஆறாமாண்டின் முடிவுக்குப் பிந்தாமல் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்களுக்குக் அதிகமான சராசரி வருடாந்த மழைவீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் உள்ளவிடத்து, II ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் அத்துடன்

| நிரல் II | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 13.97 |
| மீள நடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 22.86 |
| மீள நடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 27.94 |
| மீள நடுகையின் பின்னர் ஏழாமாண்டின் முடிவில் | 50.80 |

இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

9. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் முழுமையான மானியத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை பெறுபவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமானவையேனும் நிலத்திலிருந்து அளக்கின்றபோது நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு (121.92) சென்றி மீற்றர்களைக் கொண்ட உயரத்தில் ஐம்பது தசம் எட்டு சைபர் (50.80) சென்றி மீற்றர்களைக் கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவரை, ஏதேனும் இறப்பர் செடியிலிருந்து பால்வெட்டுதலோ அல்லது பால் வெட்டுவித்தலோ ஆகாது.

10. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு இவ்வொழுங்குவிதியின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழான மானியமொன்று செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் அறிவித்தல் மூலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியுனுள், இறப்பர் தோட்டத்தை மீள நடுகை செய்வதனைத் திருப்பதிகரமானவொரு முறையில் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதுகின்றவராக அவரினால் எழுத்தில் வழங்கப்படும் அத்தகைய பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

11. (அ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், 5, 6, 7, 8 அல்லது 9 ஆகிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென, அல்லது ;

(ஆ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின்பாலான அசட்டை அல்லது விழிப்புக்கவனத்துடனான முயற்சி இல்லாமை காரணமாக, ஓர் இடப்பரப்பில் மீள நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகள், இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தனவாக இருக்கவில்லையென; அல்லது

(இ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதியின் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு மானியம் அல்லது தடைக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளனரென,

இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல்மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மானியத்தொகையை மீளளிக்கும்படி அவரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

12. இவ்வொழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் இவ்வொழுங்குவிதியின் கீழான கையளிப்புத் தத்துவம் தவிர்ந்து, தனது கைப்பட எழுதியதின்பேரில் இறப்பர் கட்டுப்பாட்டாளர் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் எவரேனும் உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.

13. (அ) 5, 6, 7, 8, 9, 10 அல்லது 11 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் விண்ணப்பமொன்று வெளிப்படுத்துகையொன்று அல்லது ஏதேனும் கூற்று பொய்யானதென அறிந்து கொண்டு அதனைச் செய்கின்ற அல்லது ;

(இ) ஒரு மானியத்துக்கான விண்ணப்பதாரரொருவராக அல்லது பெறுநரொருவராக இருந்து கொண்டு இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்ற ;

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

14. (1) இவ்வொழுங்குவிதியின்கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் எவரேனும் ஆளுக்கு மானியத்தொகையாக அல்லது வேறு கொடையாக அத்தகையதொரு திட்டத்தின் கீழ் ஏதேனும் பணத்தொகைகள் செலுத்தப்பட்டு அவை மீளச்செலுத்தப்படவில்லையாயின், அத்தகைய தொகைகள், ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆளொருவர் அத்தகைய மானியத்தை திருப்பிச் செலுத்தத்தவறின் அத்துடன் சிறுபற்று நிலமொன்று அல்லது தோட்டமொன்றை கைவிட்டுச் சென்றுள்ளார் என்று இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நிகழ்வின் முகற்றோற்றளவிலான சான்றாகக் கருதப்பட வேண்டும்.

15. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1953 ஒற்றோபர் 3 ஆந்திகதிய 10594 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1953 ஆம் ஆண்டின் இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2005, 2006, 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் மீள நடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலாதான மானியத்தின் பின்வரும் தவணைப்பணங்கள், பின்வரும் முறையில் 4 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் செலுத்தப்பட்டிராவிடின், மட்டுமே அத்தகைய தவணைப் பணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.

புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையின்கீழுள்ள தோட்டங்களும் சிறுபற்று நிலங்களும் :-

| | | |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஏ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான எட்டாவது தவணைப்பணம் ; |
| 2006 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (எ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2007 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஊ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2008 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (உ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2009 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஈ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான நான்காவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2010 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (இ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ; |
| 2011 ஆம் ஆண்டு | - | இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (அ) மற்றும் (ஆ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான முதலாவது தவணைப்பணத்திலிருந்து. |

16. இவ்வொழுங்குவிதிகளில் -

"தோட்டம்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயருக்குக் குறைவாகவிராததும் இறப்பர் கன்றுகளிலிருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு என்று பொருள்படும்.

"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்.

"மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்.

"சிறுபற்று நிலங்கள்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயர்களுக்குக் குறைவுள்ளதும் இறப்பர் கன்றுகளில் இருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு ஒன்று என்று பொருளாகும்.

"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும் என்பதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.

10- 299/3

---

ச.வ.பீ. 51/53 (III).

**(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டம்**

(437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மகிந்த சமரசிங்க,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2012, ஓகத்து 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 917/4 ஆம் இலக்க, இறப்பர் மீளநடுகை (இறப்பருடன் தேயிலை பல்லின பயிரிடல் ) மானிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* இறப்பர் கட்டுப்பாட்டாளர், ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளரொருவராகவுள்ள எவரேனுமாளினால் அதற்கென எழுத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அத்தகைய தோட்டத்தில் அல்லது சிறு பற்று நிலத்தில் இறப்பருடன் தேயிலை பயிரிடும் பல்லின நோக்கத்துக்காக, இதனகத்துப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (437 ஆம் அத்தியாயமான) இறப்பர் மீளநடுகை மானியச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இறப்பர் மீளநடுகை மானிய நிதியத்திலிருந்து அவ்வாளுக்கான மானியமொன்றை, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அளிக்கலாம்.

*3.* இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் மானியத்துக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அந்நோக்கத்துக்காகப் பொருளளவில் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

*4.* (1) 2011 ஆம் ஆண்டு தொடர்பில் அல்லது அதற்குப்பின்னர் வழங்கப்பட்டவொரு மீளநடுகை அனுமதிப்பத்திரமொன்றின்மேல், புறநீங்கலாகத் தனிப்பட்ட சொத்தாண்மையைக் கொண்ட ஒரு தோட்டத்தின் அல்லது சிறுபற்றுநிலத்தின் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பாகத்தில் இறப்பருடன் தேயிலையை பல்லின பயிரிடுவதற்காகச் செலுத்தற்படற்பாலதான மானியத்தின் தொகையானது, மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஒரு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஐநூறு ரூபாவாக (1,22,500) ரூபாவாக இருத்தல் வேண்டுமென்பதுடன், பின்வரும் முறையில் எட்டுத் தவணைப்பணங்களில் செலுத்தப்படுதலும் வேண்டும் :-

(அ) (i) நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஐயாயிரத்து அறுநூறு (ரூ. 5,600 ரூபா) முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய தாவர வகைகளை முற்றாகப் பிடுங்கியதன் பின்னரும் செலுத்தப்படுதல் வேண்டும். குழிகளைத் தோண்டுவதற்கு முன்னர் தவணைப்பணமானது செலுத்தப்படலாகாது ; அல்லது

(ii) மீளநடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் ஐயாயிரத்து அறுநூறு ரூபா (5,600 ரூபா) முதலாவது தவணைப்பணம், அத்தகைய இடப்பரப்பில் ஏலவேயுள்ள இறப்பர் மரங்களையும் ஏனைய தாவர வகைகளை முற்றாகப் பிடுங்கியதன் பின்னர் செலுத்தப்படல் வேண்டும். சொல்லப்பட்ட தொகையின் ஐம்பது சதவீத்தை விஞ்சாதவொரு தொகை, ஏலவேயுள்ள இறப்பர் மரங்கள் அல்லது முறையே வேறு முற்றான பிடுங்குகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றித் தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளரினால் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கப்பட்டதன்மேல் பகுதியளவிலான கொடுப்பனவாகச் செலுத்தப்படலாம்.

(ஆ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் முப்பதாயிரத்து நூறு ரூபா (30,100 ரூபா) இரண்டாவது தவணைப்பணம், நடுகை பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தொகையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சாத தொகையொன்று மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்டமை பற்றி அறிவிக்கப்பட்டதன்மேல், தோட்டத்தின் அல்லது சிறுபற்று நிலத்தின் உரிமையாளருக்குப் பகுதி அளவிலான கொடுப்பனவாக இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் செலுத்தப்படலாம் நடுகையைத் தொடர்ந்து பரிசோதனை நடாத்தப்படும் நேரத்தில், அத்தகைய தவணைப்பணத்தைக் கொடுப்பனவு செய்வதற்கான எல்லாத் தேவைப்பாடுகளும் நிறைவேற்றப்படவில்லை எனக் காணப்படின், திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் அவ்விடயங்களுக்காக பின்வரும் முறையில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் :-

| | | ஒரு ஹெக்டேயருக்கு<br>ரூபா சதம் |
|---|---|---|
| (1) | குழிகளைத் தோண்டுதலும், முளைவிட்ட கட்டைகளை நடுதலும் | 15,400.00 |
| (2) | மண் வளம் பேணல் (வடிகால்களை வெட்டுதல் அல்லது கல்லணைகளை நிர்மாணித்தல் அல்லது மேடைகள் முதலியன). | 7,000.00 |
| (3) | வேலியடைத்தல் | 2,100.00 |

ஏதேனும் மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிராத வேலைகளைத் திருப்திகரமாக பூர்த்தி செய்த பின்னரே செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் அத்தகைய வேலை பூர்த்தி செய்யப்படும் வரை, மீதிப்பணத்தின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட வேண்டும்.

(இ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பத்தாயிரத்து ஐநூறு ரூபாவான (10,500 ரூபா) மூன்றாவது தவணைப்பணம், மீளநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஓராண்டுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினான்காயிரத்து எழுநூறு ரூபாவான (14,700 ரூபா) நான்காவது தவணைப் பணம், மீளநடுகை அல்லது புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் இரண்டாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

(உ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினான்காயிரத்து எழுநூறு ரூபாவான (14,700 ரூபா) ஐந்தாவது தவணைப்பணம், மீளநடுகை அல்லது புது நடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினான்காயிரத்து எழுநூறு ரூபாவான (14,700 ரூபா) ஆறாவது தவணைப்பணம், மீள நடுகை அல்லது புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் நான்காண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(எ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினைந்தாயிரத்து நானூறு ரூபாவான (15,400) ஏழாவது தவணைப்பணம், மீளநடுகை அல்லது புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஐந்தாண்டுகளுக்கு முந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஏ) ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் பதினாறாயிரத்து எண்ணூறு ரூபாவான (16,800 ரூபா) எட்டாவது தவணைப் பணம் .

(i) மீளநடுகை அல்லது புதுநடுகை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் ஆறாண்டுகள் செல்வதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும் ;

(ii) பால் வெட்டுவதற்குத் தகுந்த பருமனை எய்தியுள்ள ஒவ்வொரு இறப்பர் மரம் மீதும் மழைக் கவசமானது இடப்பட்டிருக்கும்வரை மேற்கூறிய எட்டாவது தவணைப்பணம் செலுத்தப்படலாகாது ; இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது போன்ற அத்தகைய முறையில் மழைக்கவசமானது இடப்பட்டிருக்க வேண்டும் .

(ஏ) (i), (ii) என்பன இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் கீழான (ஆ) பந்தியின் கீழான மீளநடுகையுடன் தொடர்புடையனவன்று.

(2) எவ்வாறாயினும், இறப்பர் கட்டுப்பாட்டாளர் இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (இ) முதல் (ஏ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த முன்னேற்றங்கள் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளுக்கு முன்னர் அடையப்பட்டுள்ளனவென இறப்பர் கட்டுப்பாட்டாளர் திருப்திப்படுவதன்மேல், அவர் தனது தற்றுணிபின்பேரில் இயைபான தவணைப்பத்தை முந்தியவொரு திகதியில் விடுவிக்கலாம்.

(3) நடுகை பூர்த்தியாக்கப்பட்ட அல்லது அத்தகைய துப்புரவாக்கலில் பால்வெட்டுதல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்டு எந்தவொரு மானிய தவணைப்பணமும் செலுத்தப்படலாகாது. இது இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆவது ஒழுங்குவிதியின் (ஆ) பந்திக்கு அமைவாக ஏழு ஆண்டுகளாகும். இவ்வொழுங்குவிதியானது 2011 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் வழங்கப்பட்ட நடுகை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

(4) களத்தில் கன்றுகளை நாட்டிய திகதி மீளநடுகை திகதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நடுகை செய்யப்படவுள்ள இடப்பரப்பு, பரப்பளவில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய இடப்பரப்பு ஒரு ஹெக்டேயருக்குக் குறைவாகவுள்ள ஒரு பாகத்தை உள்ளடக்குமிடத்து, செலுத்தப்படற்பாலதான மானியத்தொகையைக் கணிப்பிடுகையில், இடப்பரப்பின் அந்தப்பரப்பளவுக்கு அல்லது பாகத்துக்கு ஏற்புடையற்பாலாகவுள்ளவாறான இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்கள் இடப்பரப்பின் பரப்பளவு அல்லது பாகம் ஒரு ஹெக்டேயருக்கு என்ன விகிதாசாரத்தைக் கொண்டுள்ளதோ அந்த விகிதாசாரத்தில் ஏற்புடையதாதல் வேண்டும்.

(6) நிலத்துக்கு மேல் நூற்றிருபத்தொன்று தசம் ஒன்பது இரண்டு சென்றி மீற்றர்கள் (121.92) என்ற உயரத்தில் விட்டத்தில் ஐம்பது தசம் எட்டு சென்றி மீற்றர்களைக் (50.8) கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவையும், நடுகையின் ஐந்தாவது ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்குத் தேவைப்பட்ட மரங்களின் 2/3 எண்ணிக்கையில் ஆகக்குறைந்த எண்ணிக்கையான மரங்களைக் கொண்ட நடுகைப் பெருந்தோட்டங்களுக்கு அல்லது சிறுபற்று நிலத்தில் அப்பொருள்பட இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலரொருவரிடமிருந்து சான்றிதழொன்று கிடைக்கப்பெற்றதன் மீது, ஒரு ஹெக்டேயருக்கு (4,900 ரூபா) தொகையினதாக ஊக்குவிப்புக் கொடுப்பனவொன்று செலுத்தப்படலாம்.

(7) (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும், ஏதேனும் காணியின் மீது இறப்பரை புதிதாக மீளநடுவதற்கு எந்த உரிமையாளருக்கு செய்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றதோ, அவர், மானியத் தவணைப்பணங்களிலிருந்து வருமதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் ஒன்றில் நடப்புக் கணக்கொள்றையோ அரச வங்கியின் அல்லது தனியார் வர்த்தக வங்கியின் கிளையொன்றில் திறத்தலும் பேணுதலும் வேண்டும்.

5. (1) மானியத்தின் முதலாவது தவணைப்பணம் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதலும், நடுகை செய்யப்பட்ட இடப்பரப்பை நல்ல, கமத்தொழிலுக்கு, உரிய நிலைமையில் பேணுதலும் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) எந்த இடப்பரப்புக்காக மீள நடுகை அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பு தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைப்பணங்கள் வருமதியாகவுள்ளதோ அல்லது அதற்கு மேற்பட்ட வருமதியாகவுள்ளனவோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான அங்கீகாரமின்றி அத்தகைய இடப்பரப்பின் பாகத்தையோ அல்லது முழுமையையோ விற்பனை செய்தலோ அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலோ ஆகாது.

6. (1) ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஏதேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்றின் முதலாவது தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், அத்தகைய தவணைப்பணம் கொடுப்பனவு செய்யப்படும் திகதியிலிருந்து ஓராண்டினுள், அல்லது இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அத்தகைய தவணைப்பணம் அதற்கென கொடுக்கப்படக்கூடியவாறான மேலதிக காலத்தினுள் -

(அ) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்படும் அத்தகைய வகை அல்லது வகைகளைச் சேர்ந்த இறப்பர் செடிகளுடன் அத்தகைய இடப்பரப்பை நடுகை செய்வதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும் ;

(ஆ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படின், இறப்பர் செடிகளும் பருப்புவகை நிலமேவு செடிகளும் தவிர்ந்த ஏனைய எல்லாச் செடிகளையும் அத்தகைய இடப்பரப்பிலிருந்து அகற்றுதல் வேண்டும் ;

(இ) எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வடிகால்களை அல்லது கல்லணைகளை அத்தகைய இடப்பரப்பில் நிர்மாணித்தல் வேண்டும் ;

(ஈ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய இடப்பரப்பில் பருப்பு வகை நிலமேவு பயிர்களை நடுதல் வேண்டும். அல்லது எழுத்திலான அறிவித்தல் மூலம் இறப்பர் கட்டுப்பாட்டாளர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய இடப்பரப்பில் மண் அரிப்பைத் தடுப்பதற்கான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் ; அத்துடன்

(உ) எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாறு செய்யும்படி இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் தேவைப்படுத்தப்படின் அத்தகைய இடப்பரப்பைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணித்தல் வேண்டும்.

(2) (அ) இவ்வொழுங்குவிதிகளின் ஆறாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் வேலை, உரிமையாளரினால் செய்யப்படாதவிடத்து, அத்தகைய வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமென இறப்பர் கட்டுப்பாட்டாளர் கருதக்கூடியவாறான ஆட்களை தொழிலுக்கமர்த்தலாம் என்பதுடன், தேவையான பொருட்களையும் பயன்படுத்தலாம் ;

(ஆ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், அத்தகைய உரிமையாளருக்குச் செலுத்தப்படற்பாலானவான மானியங்களிலிருந்து அது சம்பந்தமான செலவுகளைக் கழித்தல் வேண்டும்.

7. காணிப்பரப்பொன்று தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் பாகமொன்று செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அக்காணிப்பரப்பின் ஒவ்வொரு ஹெக்டேயரிலும் மீளநடுகை செய்யப்பட்ட இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்த எண்ணிக்கை பின்வரும் தேவைப்பாடுகளுடன் இணைங்கியொழுகுதல் வேண்டும் :-

(அ) (i) இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் ஆராய்ச்சித் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ( RRIC, RRISL) உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகளையும் பயன்படுத்தி, மீளநடுகை செய்யப்படும் போதும், 360 செடிகள் அல்லது

(ii) மீள நடுகை அல்லது புது நடுகைக்குப் பின்னரான முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 360 செடிகள் ;

(iii) மீள நடுகை அல்லது புதுநடுகைக்கு முன்னரான மூன்றாம், நான்காம் ஆண்டின் முடிவில் ஒரு ஹெக்டேயருக்கு 320 செடிகள் ;

(iv) மீள நடுகை அல்லது புதுநடுகைக்கு பின்னரான உடனடுத்த இரு ஆண்டுகளில் 300 செடிகள் ;

(v) மீள இவ்வொழுங்குவிதியின் ஒழுங்குவிதி 8 இன் பந்தி (ஆ) உடன் தொடர்புபடும் போது மீளநடுகைக்கு பின்னர் உடனடுத்த 3 ஆண்டுகளுக்கு 300 செடிகள் ;

(ஆ) முளைவிட்ட இறப்பர் தாவரங்கள் பயிரிடும் போது அவை கீழே விதந்துரைக்கப்பட்ட இடைவெளியிலும் எண்ணிக்கையிலுமானதாக செடிகள் நடப்பட வேண்டும்.

(i) (RRIC, RRISL) மற்றும் ஏனைய உயர் விளைச்சல் தரும் செடித்தொகுதிகளுடன் இடைப்பயிராக தேயிலையைப் பயிரிடல் :

| பரப்பளவு | கன்றுகள் |
|---|---|
| 244 செ.மீ. x 1220 செ.மீ (8'x 40') | ஒரு ஹெக்டெயருக்கு 360 (ஓர் ஏக்கருக்கு 145) |
| 274.5 செ.மீ. x 274.5 செ.மீ இறப்பர் இருவரிசை நிரைகள் X 1830 செ.மீ. (9'x9' 60') | ஒரு ஹெக்டெயருக்கு 325 (ஓர் ஏக்கருக்கு 130) |

(இ) இறப்பர் கட்டுப்பாட்டாளர், காணியின் அமைப்பைக் கவனத்துட் கொண்டு, மேலே விதிக்கப்பட்டவை தவிர வேறுபடற்பாலனவான நடுகை இடைவெளிகளில் நடுவதற்கு அதிகாரம் அளிக்கலாம். எவ்வாறாயினும், செடிகளுக்கிடையிலான ஆகக்குறைந்த இடைவெளியானது, இவ்வொழுங்குவிதியின் (ஆ) பந்தியின் (i) மற்றும் (ii) என்னும் உட்பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள இடைவெளிகளில் கன்றுகளின் எண்ணிக்கைக்கு குறைவாகவிருத்தல் ஆகாது.

8. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், அத்தகைய இடப்பரப்பில் மீள்நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றின் ஆகக்குறைந்த சுற்றளவு நிலத்துக்குமேல் 121.92 சென்றி மீற்றர் உயரத்தில் இருக்கக்கூடிய,

(அ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்களான அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழை வீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ளவிடத்து I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும் அத்துடன்

| நிரல் I | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 15.87 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 25.40 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் ஐந்தாமாண்டின் முடிவில் | 31.75 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் ஆறாமாண்டின் முடிவில் | 50.80 |

(ஆ) அத்தகைய இடப்பரப்பு, 254 சென்றி மீற்றர்களான அல்லது அதற்கு அதிகமான சராசரி வருடாந்த மழைவீழ்ச்சியை உடைய ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ளவிடத்து II ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவும்.

| நிரல் II | சென்றி மீற்றர்கள் |
|---|---|
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் இரண்டாமாண்டின் முடிவில் | 10.16 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் மூன்றாமாண்டின் முடிவில் | 13.97 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் நான்காமாண்டின் முடிவில் | 22.86 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர்ஐந்தாமாண்டின் முடிவில் | 27.94 |
| மீள நடுகை அல்லது புதுநடுகையின் பின்னர் ஏழாமாண்டின் முடிவில் | 50.80 |

இருத்தல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

9. ஏதேனும் இடப்பரப்புத் தொடர்பில் முழுமையான மானியத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை பெறுபவராகவுள்ள அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், இறப்பர் செடிகளின் ஆகக்குறைந்தது அறுபது சதவீதமானவையேனும் நிலத்திலிருந்து அளக்கின்றபோது நூற்றிருபத்தொன்று தசம் புள்ளி ஒன்பது இரண்டு (121.92) சென்றி மீற்றர்களைக் கொண்ட உயரத்தில் ஐம்பது தசம் புள்ளி எட்டு சைபர் (50.80) சென்றி மீற்றர்களைக் கொண்ட ஆகக்குறைந்த பருமனை எய்தியுள்ளவரை, ஏதேனும் இறப்பர் செடியிலிருந்து பால்வெட்டுதலோ அல்லது பால் வெட்டுவித்தலோ ஆகாது.

10. எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு இவ்வொழுங்குவிதியின் 4 ஆம் ஒழுங்குவிதியின் கீழான மானியமொன்று செலுத்தப்படற்பாலதாக உள்ளவிடத்து அல்லது பகுதியளவில் செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இறப்பர் கட்டுப்பாட்டாளர் அறிவித்தல் மூலம் எழுத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியுனுள், இறப்பர் தோட்டத்தை அல்லது சிறு பற்றுநிலத்தை நடுகை செய்வதனைத் திருப்பதிகரமானவொரு முறையில் நிறைவேற்றும் நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதுகின்றவராக அவரினால் எழுத்தில் வழங்கப்படும் அத்தகைய பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு அல்லது தடைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

11. (அ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், 5, 6, 7, 8 அல்லது 9 ஆகிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென, அல்லது ;

(ஆ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியமொன்று அல்லது அதன் ஏதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எதேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின்பாலான அசட்டை அல்லது விழிப்புக்கவனத்துடனான முயற்சி இல்லாமை காரணமாக, ஓர் இடப்பரப்பில் மீள நடுகை செய்யப்பட்ட இறப்பர் கன்றுகள், இவ்வொழுங்குவிதிகளின் 8 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இசைந்தனவாக இருக்கவில்லையென, அல்லது ;

(இ) எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு மானியம் அல்லது அதன் எதேனும் பாகம் செலுத்தப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், இவ்வொழுங்குவிதியின் 10 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு, தேவைப்பாட்டுக்கு, மட்டுப்பாட்டுக்கு மானியம் அல்லது தடைக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறியுள்ளனரென,

இறப்பர் கட்டுப்பாட்டாளர் அபிப்பிராயப்படுமிடத்து, இறப்பர் கட்டுப்பாட்டாளர், எழுத்திலான அறிவித்தல்மூலம், ஒன்றில் உடனடியாக அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், ஓர் இடப்பரப்புத் தொடர்பில் அத்தகைய அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட்டுள்ள மானியத்தொகையை மீளளிக்கும்படி அவரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், இவ்வொழுங்குவிதியின் கீழ் எந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் எவரும், அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறுதலுமாகாது.

12. இவ்வொழுங்குவிதியின் கீழ் இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகள் எவற்றையேனும் இவ்வொழுங்குவிதியின் கீழான கையளிப்புத் தத்துவம் தவிர்ந்து, தனது கைப்பட எழுதியதின்பேரில் இறப்பர் கட்டுப்பாட்டாளர் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் எவரேனும் உத்தியோகத்தரிடம் கையளிக்கலாம்.

13. (அ) 5, 6, 7, 8, 9, 10 அல்லது 11 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ; அல்லது

(ஆ) ஏதேனும் முக்கியமான விபரத்தில் விண்ணப்பமொன்று வெளிப்படுத்துகையொன்று அல்லது ஏதேனும் கூற்று பொய்யானதென அறிந்து கொண்டு அதனைச் செய்கின்ற அல்லது ;

(இ) ஒரு மானியத்துக்கான விண்ணப்பதாரரொருவராக அல்லது பெறுநரொருவராக இருந்து கொண்டு இறப்பர் கட்டுப்பாட்டாளருக்கு ஏதேனும் பொய்யான தகவலைக் கொடுத்துதவுகின்ற ;

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

14. (1) இவ்வொழுங்குவிதியின்கீழ் செலுத்தப்பட்ட மானியத்தைத் திருப்பிக்கொடுப்பதற்கு எவரேனும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் தவறுகின்றவிடத்தெல்லாம் அத்தகைய தொகைகள், ஒரு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்றாற்போன்று அறவிடப்படுதல் வேண்டும்.

*(2) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மானியத் தவணைப்பணங்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஆளொருவர் அத்தகைய மானியத்தை திருப்பிச் செலுத்தத்தவறின் அத்துடன் தோட்டமொன்றை கைவிட்டுச் சென்றுள்ளார் என்று இறப்பர் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று அத்தகைய நிகழ்வின் முகற்றோற்றளவிலான சான்றாகக் கருதப்பட வேண்டும்.*

*15. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறாக, 1953 ஒற்றோபர் 3 ஆந் திகதிய 10594 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1953 ஆம் ஆண்டின் இறப்பர் மீளநடுகை மானிய ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறையே 2005, 2006, 2007, 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகள் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் மீளநடுகை அனுமதிப்பத்திரங்களின் மீது செலுத்தப்படற்பாலதான மானியத்தின் பின்வரும் தவணைப்பணங்கள், பின்வரும் முறையில் 4 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வொழுங்கு விதிகள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் அத்தகைய அனுமதிப்பத்திரங்களின் மீது வருமதியாகவுள்ள எல்லாத் தவணைப் பணங்களும் செலுத்தப்பட்டிராவிடின், மட்டுமே அத்தகைய தவணைப் பணங்கள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*புறநீங்கலாகத் தனியார் சொத்தாண்மையின்கீழுள்ள தோட்டங்கள் :-*

| | | |
|---|---|---|
| *2005 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஏ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான எட்டாவது தவணைப்பணம் ;* |
| *2006 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (எ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஏழாவது தவணைப்பணத்திலிருந்து ;* |
| *2007 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஊ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஆறாவது தவணைப்பணத்திலிருந்து ;* |
| *2008 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (உ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான ஐந்தாவது தவணைப்பணத்திலிருந்து ;* |
| *2009 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (ஈ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான நான்காவது தவணைப்பணத்திலிருந்து ;* |
| *2010 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (இ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான மூன்றாவது தவணைப்பணத்திலிருந்து ;* |
| *2011 ஆம் ஆண்டு* | - | *இவ்வொழுங்குவிதிகளின் 4 (1) (அ) மற்றும் (ஆ) என்னும் ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படியான முதலாவது தவணைப்பணத்திலிருந்து.* |

*16. இவ்வொழுங்குவிதிகளில் -*

*"தோட்டம்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயருக்குக் குறைவாகவிராததும் இறப்பர் கன்றுகளிலிருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு என்று பொருள்படும்.*

*"உரிமையாளர்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளை உடையதாதல் வேண்டும்.*

*"மீளநடுகை அனுமதிப்பத்திரங்கள்" என்பது, (436 ஆம் அத்தியாயமான) இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்.*

*"சிறுபற்று நிலங்கள்" என்பது, பரப்பளவில் 4.04 ஹெக்டேயர்களுக்குக் குறைவுள்ளதும் இறப்பர் கன்றுகளில் இருந்து பால் சேகரிக்கும் நோக்கத்துக்காக அதன்மீது அக்கன்றுகள் வளர்க்கப்படுவதுமான காணி இடப்பரப்பு ஒன்று என்று பொருளாகும்.*

*"இறப்பர் கட்டுப்பாட்டாளர்" என்பது, இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டவராகக் கருதப்பட்ட இறப்பர் கட்டுப்பாட்டாளர் என்று பொருளாகும் என்பதுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர், தலைமையதிபதியையும் உள்ளடக்கும்.*

*10- 299/4*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*